Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12


**இப்பொழுது தியானித்துக்கொண்டிருப்பது . .**

**வேத ஆராய்ச்சி பாடங்கள்**



வாரந்தோறும் – திங்கள் கிழமைகளில்
மாலை - 6.30 மணி முதல் 8.30 மணி வரை
இடம்: ஏ-4, டேஜு ப்ளாஸா, 2, தெற்கு அவென்யூ,
ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
( சைதாப்பேட்டை கோர்ட் அருகில் )

வேதத்தின் ஆழங்களைப் படித்து தெரிந்துகொள்ளவேண்டும் என்று வாஞ்சிப்பவர்கள் இதில் கலந்துகொள்ளலாம்





Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# ஏக்காளம்

தனிப்பிரதி ரூ 20/=   செப்டம்பர் 2011
VOL . 5   ISSUE . 2






**உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான், ஐசுவரியவானாகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான்** (நீதிமொழிகள் 28:20). கர்த்தருக்கு பயந்து அவரைப் பின்பற்று பவனை கர்த்தர் ஆசீர்வதிப்பார். ஆனால், ஐசுவரியவானாக மாறுவதற்கு மட்டும் முயற்சிப்பவன் தண்டிக்கப்படுவான். சுயநலக்காரன் ஐசுவரியவானாவதற்கே முயற்சி செய்கிறான். தன் பேராசை வறுமையின் எல்லைக்கே கொண்டு செல்லும் என்பதை அவன் அறியாமல் இருக்கிறான்.

நாம் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது, அவரை நம்பி வாழத் தொடங்குகிறோம். இயேசு கிறிஸ்து நம்மை ஆளுகை செய்கிறார். நாம் அவருடைய பிள்ளைகளாகி விடுகிறோம். நம் எண்ணங்களில், நம் நடத்தைகளில் மாறுதல் உண்டாகிறது. தடுமாற்றமில்லாமல் இயேசு கிறிஸ்துவில் அசையாமல் நிலையாக இருப்போம். நாம் உண்மையுள்ளவர்களாக, நம்பக்கைக்குரியவர்களாக, விழிப்புணர்வுடையவர்களாக, மனவுறுதியுள்ளவர்களாக இருப்போம். எந்தக் காரியத்தைச் செய்தாலும் கவனத்தோடு, அக்கரையோடு, தடுமாற்றமில்லாமல் உறுதியுடன் நல்லமுறையில் செய்வோம். இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருக்கும்போது உண்மையுள்ளவர்களாக இருப்போம்.

**வஞ்சனையால் தேடின பொருள் குறைந்துபோகும்; கைப்பாடாய்ச் சேர்க்கிறவனோ விருத்தியடைவான்** (நீதிமொழிகள் 13:11). சிலர் பணத்தை பெற்றுக் கொள்வதற்காக மற்றவர்களை ஏமாற்றுகிறார்கள். ஏமாற்றி வாங்கிய பணத்தை சேர்த்து வைக்கலாம். அதனால் அவர்களுக்கு நிம்மதி இருக்காது. வேதனையோடு, சமாதானமில்லாமல் இருப்பார்கள். அப்படி மற்றவர்களை வஞ்சித்து பெற்றுக் கொண்ட பணம் அவர்களைவிட்டு உடனடியாக போய்விடும். வீண் செலவுகள், வியாதிகள், உபத்திரவங்கள் அவர்கள் வாழ்க்கையில் வரும். கர்த்தருடைய கோபத்திற்கு ஆளாவார்கள். அவர்கள் பரம்பரையினருக்கும் சாபம் வரும். அவர்கள் பாதுகாப்பாய் வாழலாம் என்று கொள்ளையடிக்கிறார்கள். தவறான காரியங்களினால் பணத்தை சேர்த்தவர்களுக்கு கேடு வரும் . கர்த்தர் அதற்கு பதிலடி கொடுப்பார். நாம் செய்யும் எல்லாவற்றிற்கும் கர்த்தருக்கு கணக்கு கொடுக்க வேண்டும்.

நேர்மையான வழியில் கடினமாக உழைத்து சம்பாதிக்கிறவர்களின் பணமானது மென்மேலும் வளர்ந்து பெருகும். அவர்களுக்கு வேதனைகள் இருக்காது. அவர்கள் குடும்பம் செழிப்பாயிருக்கும். **பொய்நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம் போலிருக்கும்** (நீதிமொழிகள் 21:6). சீக்கிரத்தில் பணக்காரர்களாவதற்கு பிறரை ஏமாற்றினால், அந்த பணம் அவர்களை விட்டு சீக்கிரத்தில் போய்விடும். அந்த பணம் அவர்களை மரணத்திற்கே அழைத்துச் செல்லும்.

### எளிதாக பணக்காரனாக நினைத்த கேயாசி

சீரிய ராஜாவின் படைத் தலைவனான நாகமான் குஷ்டரோகியாய் இருந்தான். அவன் சுகத்தைப் பெற்றுக் கொள்ள இஸ்ரவேல் தேசத்திற்கு வந்தான். தேவனுடைய மனுஷனாகிய எலிசாவின் வார்த்தையின்படி, யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம் செய்தபோது, சுகம் பெற்றான். அவன் எலிசாவுக்கு காணிக்கை கொடுத்தபோது, அதை எலிசா வாங்க மறுத்தான். ஆனால், எலிசாவின் வேலைக்காரனாகிய கேயாசி பொருளாசையுள்ளவனாய் நாகமானிடமிருந்து எதாகிலும் வாங்கவேண்டுமென்று, அவன் பின்னால் ஓடினான். அவன் நாகமானிடம் ஒரு தாலந்து வெள்ளியையும் (75 பவுண்டு), இரண்டு மாற்று வஸ்திரங்களையும் தரவேண்டும் என்று கேட்க எஜமான் என்னை அனுப்பினார் என்று பொய் சொல்லி அவற்றைப் பெற்றுக் கொண்டான். பின் அவன் ஒன்றும் அறியாதது போல எலிசாவின் முன்வந்து நின்றான். எலிசா அவனிடம் எங்கே போயிருந்தாய் என்று கேட்டதற்கு, அவன் நான் எங்கும் போகவில்லை என்று பொய் சொன்னான். அதற்கு எலிசா, பணத்தையும், வஸ்திரங்களையும் இலவசமாக வாங்குவதற்கு இது காலமா என்று சொல்லி, நாகமானின் குஷ்டரோகம் உன்னையும், உன் சந்ததியாரையும் என்றென்றைக்கும் பிடித்திருக்கும் என்றான். உடனே அவன் குஷ்டரோகியானான் (2 இராஜாக்கள் 5:27).



கேயாசி எளிதாக, பணக்காரனாகிவிட நினைத்து, இந்த சரியான நல்ல வாய்ப்பை விட்டுவிடக்கூடாது என்று சுயநலத்தோடு எலிசா வாங்க மறுத்த வெகுமதியை, பொய்சொல்லி கேட்டு பெற்றுக் கொண்டான். எலிசாவுக்கு காணிக்கையாக வந்த வெகுமதியை கேயாசி மனதார விரும்பி, ஏற்றுக் கொண்டான். பணத்தை பெற்றுக் கொள்ளும் எண்ணத்தோடு பொய் சொல்லி, தான் பெற்றுக் கொண்டதை மறைக்க முயன்றான். பிரியமானவர்களே, நாம் பேராசைப்படக்கூடாது. பேராசைக்கொண்டு பிறரை ஏமாற்ற நினைப்பது தவறு. உண்மையற்ற ஒன்றை உண்மையானதாகப் பிறரை நம்பச் செய்யும்வகையில் முயல்வது தவறு. மற்றவர்களுக்குரியதை ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி பெற்றுக் கொள்ள வாஞ்சையோடு இருக்கிறோமா? சுய ஆதாயத்திற்காக,

மற்றவர்களிடம் பொய்சொல்லி, நம் உள்ளான நோக்கத்தை மறைக்க முயல்கிறோமா? கேயாசிக்கு மட்டுமல்ல, அவனது சந்ததிக்கும் சாபம் பின்தொடர்ந்தது. நமக்கு இது எச்சரிக்கையாயிருக்கட்டும்.

**பாதாளமும் அழிவும் திருப்தியாகிறதில்லை; அதுபோல மனுஷனுடைய கண்களும் திருப்தியாகிறதில்லை** (நீதிமொழிகள் 27:20). மக்கள் எப்போதும் மேலும் மேலும் ஆசையுள்ளவர்களாக இருப்பார்கள். இருப்பதில் திருப்தியடையமாட்டார்கள். எல்லாவித வசதிகளோடு, செல்வச் செழிப்பாக வாழும் மனிதனை வாழ்க்கையில் வெற்றியடைந்துவிட்டதாக உலக மனிதர்கள் கூறுவார்கள். இது உண்மையான வெற்றி இல்லை. ஏனென்றால் இவர்கள் கன்மலையாகிய கிறிஸ்துவில் கட்டப்படவில்லை. அவர்கள் வாழ்க்கையில் தேவனுக்கு இடமேயில்லை. ஞானமுள்ள மனிதன் தேவனுடைய வார்த்தையை கனப்படுத்தி, அதன்படி வாழ்வான். அவருடைய வார்த்தையின் வெளிச்சத்தின்படி நடப்பான். தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை நம்புவான். அது அவனுக்கு வெற்றியைக் கொண்டுவரும். தன்வாழ்க்கையில் தேவனுடைய திட்டத்தை அறிந்து, அந்த வெளிச்சத்தில் வாழ்வதால், வாழ்க்கையில் முன்னேறுவான். வேதவார்த்தையின்படி தொடர்ந்து நடந்து தன் வீட்டை கன்மலையாகிய கிறிஸ்துவில் கட்டுவான். உலக ஆஸ்திகளும் பணமும் இருந்தால், பாதுகாப்பாய் இருக்கலாம் என்று நினைக்கிறார்கள். பணமும் ஆஸ்திகளும் நமக்கு பாதுகாப்பை தரமுடியாது. கர்த்தர்தான் நம் பாதுகாப்பு.

**தன்னுடையதல்லாததைத் தனக்காகச் சேர்த்துக் கொள்ளுகிறவனுக்கு ஐயோ என்றும், அது எந்த மட்டும் நிற்கும் என்றும், அவன் தன்மேல் களிமண் சுமையையல்லவா சுமத்திக் கொள்ளுகிறான் என்றும் சொல்லுவார்கள்** (ஆபகூக் 2:16). மற்றவர்களுக்குரியதை எடுத்துக் கொள்ளும்போது, பல சிக்கல்களும், மிகுந்த வேதனைகளும் வரும். அவர்களே அவர்களுக்கு பாரத்தை (வருத்தம், தொல்லைகள்) வருவித்துக் கொள்கிறார்கள். பேராசையுள்ளவர்கள் தனக்கு இருப்பவற்றில் திருப்தியடையாமல், அதிகமாக சேர்க்க விரும்புகிறார்கள். வன்முறையால் பிறருக்குரியதை பறித்து தங்கள் வசதியை பெருக்கிக் கொள்கிறார்கள். ஏராளமான பணம், சொத்து முதலியவற்றைச் சேர்த்து செல்வ செழிப்போடு வாழ விரும்புகிறார்கள். தனக்கு உரிமையில்லாதவற்றை எடுத்துக் கொள்கிறார்கள். சிலர் கடன்வாங்கி அதனால் ஐசுவரியவான்களாகிறார்கள். மழை வந்தால் களிமண் எப்படி கரைந்து போகிறதோ அதுபோல திடீரென்று எதிர்பாராத விதமாக ஒரு செலவு வந்து அவர்கள் மற்றவர்களிடமிருந்து எடுத்துக் கொண்ட எல்லா பணமும் ஒன்றுமில்லாமல் வீணாய் போய்விடும். பிரியமானவர்களே, பிறருக்குரிய பணம், பொருட்கள், சொத்துகள் ஏதேனும் உங்களிடம் இருந்தால், அதை உரியவரிடம் திரும்ப கொடுத்துவிடுங்கள். அநியாயமாய் மற்றவர்களுக்குரியதை எடுத்துக் கொள்ளக்கூடாது. **அநியாயத்தின் திரவியங்கள் ஒன்றுக்கும் உதவாது; நீதியோ மரணத்துக்குத் தப்புவிக்கும்** (நீதிமொழிகள் 10:2).

**அக்கிரமத்தை யோசித்து, தங்கள் படுக்கைகளின் மேல் பொல்லாப்பு செய்ய எத்தனம் பண்ணித் தங்கள் கையில் வல்லமை இருக்கிறபடியினால், விடியற்காலமாகிறபோது, அதை நடப்பித்து, வயல்களை இச்சித்துப் பறித்துக் கொண்டு, வீடுகளை இச்சித்து எடுத்துக் கொண்டு, புருஷனையும், அவன் வீட்டையும், மனுஷனையும் அவன் சுதந்திரத்தையும் ஒடுக்குகிறவர்களுக்கு ஐயோ!** (மீகா 2:1,2). நியாயமற்ற, தவறான தீய செயல்களைச் செய்ய திட்டமிட்டு, அதைச் செயல்படுத்துகிறவர்களுக்கு பல தொல்லைகளும், கஷ்டங்களும் பாடுகளும் வரும். ஒரு மனிதனின் எண்ணங்களும், திட்டங்களும் அவர்களது செயல்களில் வெளிப்படுகிறது. அவர்கள் விரும்பியதைச் செய்யும் அதிகாரம் அவர்கள் கையில் இருந்தது. அவர்கள் வேறொருவருக்கு உரிமையானவற்றை அடைய மிகுதியான விருப்பங்கொள்கிறார்கள். அவர்கள் இச்சித்ததை அடைவதற்கு இரகசிய திட்டங்களை இருதயத்தில் சிந்திக்கிறார்கள். பின் அதை தனக்கு உரிமையாக எடுத்துக் கொள்கிறார்கள். ஒரு மனிதனுடைய சுதந்திரத்தை (பரம்பரை சொத்தை) கொடுக்காமல், நேர்மையற்ற முறையில் நடத்தி, அவன் மனதை காயமடையச் செய்து, அவனை நிலைகுலையச் செய்பவர்களுக்கு ஐயோ என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது. உங்களுடைய சிந்தனைகளில் பேராசை உள்ளடங்கியிருக்கிறதா? பிறருக்குரியவற்றை இச்சித்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற குறிக்கோளுடன் இருக்கிறீர்களா? தீய எண்ணங்கள் தவறான காரியங்களைச் செய்ய வழிநடத்தும். தவறான எண்ணங்கள் நமக்குள் வரும்போதே, ஜெபித்து, அந்த எண்ணங்கள் நம்மை ஆளுகை செய்யாதபடி காத்துக் கொள்வோம்.

**ஐசுவரியவானாக வேண்டுமென்று பிரயாசப்படாதே; சுயபுத்தியைச் சாராதே** (நீதிமொழிகள் 23:4). பணத்தை சேர்ப்பதே நம் குறியாக இருக்கக்கூடாது. பணம் நிலையில்லாதது. அழிந்துபோகும். ஒரு பறவை சிறகு முளைத்துப் பறந்து சென்றுவிடுவதைப்போல, பணம் மிக வேகமாக கரைந்துவிடும். மிகப்பெரிய ஐசுவரியவான்களாக இருந்தவர்கள். இன்றைக்கு எல்லாவற்றையும் இழந்து ஒன்றுமில்லாமல் இருக்கிறார்கள். நாம் கர்த்தரில் நிலைத்திருந்து, அவருக்கு உண்மையாய் இருக்கும்போது, நமக்கு தேவையான அனைத்தையும் கர்த்தர் நமக்கு தருவார்.

**ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும், அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பணஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள்** (1 தீமோத்தேயு 6:9,10). பணத்தின்மேல் நம் ஆசை இருக்கக் கூடாது. பணம் நம்மை ஆளுகை செய்யக் கூடாது. இயேசு கிறிஸ்து நம்மை ஆளுகை செய்ய வேண்டும். பணத்தின்மேல் அதிக ஆசை இருந்தால் தேவன்மேல் உள்ள அன்பு குறைந்து போகும். தேவனுடைய இடத்தில் பணம் வராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். ஐசுவரியவானாக மாறுவதற்கு மட்டும் முயற்சிப்பவர் களையும், மற்றவர்களை ஏமாற்றி, தீய வழியில் பணத்தை அடைய விரும்பு கிறவர்களையும் கர்த்தர் கண்டிக்கிறார்.

நாம் இந்த உலகத்திற்கு வந்தபோது வெறுங்கையோடு வந்தோம். இப்பொழுது நாம் வைத்திருக்கும் பணம், பொருட்கள், ஆஸ்திகள் நமக்கு சொந்தமானதல்ல. தேவன் நமக்கு பயன்படுத்த கொடுத்தவை என்ற எண்ணம் நமக்குள் எப்பொழு

தும் இருக்க வேண்டும். அவற்றை நாம் நேசிக்கக்கூடாது. நாம் இந்த உலகத்தை விட்டு செல்லும்போது, ஒன்றையும் கொண்டுபோவதில்லை. நமக்கு இருப்பதில் திருப்தியோடு வாழவேண்டும். சிலர் அப்படி திருப்தியோடில்லாமல் பணத்தின் மேலுள்ள ஆசையினால், மேலும் மேலும் பணத்தை பெருக்க விரும்பி, சோதனைக்குள்ளாகி, கண்ணியில் மாட்டிக் கொள்கிறார்கள். வீணான ஆசைகளை வளர்த்துக் கொள்வதினால், அவ்வீண் ஆசை அவர்களை அழிவுக்கு நேராக கொண்டு செல்கிறது. நாம் நிலையில்லாத ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வைக்காமல் தேவன் மேல் நம் நம்பிக்கையை வைக்க வேண்டும். பணம் நமக்கு சந்தோஷம், சமாதானம் தரமுடியாது. தேவன் மட்டுமே இவற்றை நமக்கு கொடுக்க முடியும் . ஏழைகளுக்கும் தேவையில் இருப்பவர்களுக்கும், கர்த்தருடைய ஊழியங்களுக்கும் தாராளமாய் கொடுக்கும்போது, கர்த்தருக்கே அதைக் கொடுக்கிறோம். பரலோகத்தில் பொக்கிஷத்தை சேர்த்து வைக்கிறோம்.

### உண்மையான மனுஷன் யார்?

**மனுஷன் பெரும்பாலும் தங்கள் தயாளத்தைப் பரசித்தப்படுத்துவார்கள்; உண்மையான மனுஷனைக் கண்டுபிடிப்பவன் யார்?** (நீதிமொழிகள் 20:6). பலர் தங்களை உண்மையானவர்களாகவும், அன்புள்ளவர்களாகவும், கூறிக் கொள்வார்கள். ஆனால், உண்மையிலே அப்படிப்பட்டவர்களை கண்டுபடிப்பது அரிது. **உண்மையுள்ளவர்கள் மனுபுத்திரரில் குறைந்திருக்கிறார்கள்** (சங்கீதம் 12:1). உண்மையை புரட்டி மக்களை ஏமாற்றுதல், பொய் பேசுதல், இருமனதாய் பேசுதல், பெருமை பேசுதல் ஆகியவற்றை கர்த்தர் வெறுக்கிறார். உண்மையானவர்கள், கர்த்தரை நேசித்து அவரைப் பின்பற்றுவார்கள். உண்மையான மனிதர்களை அவர்கள் பேசுவது மற்றும் நடந்து கொள்வதை வைத்தோ, அல்லது மற்றவர்கள் அவர்களைக் குறித்து சொல்வதை வைத்தோ கண்டுபடிக்க முடியாது. **யார் உண்மையானவர்கள் என்பதை கர்த்தரே அறிவார். என் தாசனாகிய மோசே என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் என்று கர்த்தரே மோசேயைக் குறித்து சாட்சி கொடுத்தார்** (எண்ணாகமம் 12:7). நம்மைக் குறித்தும் கர்த்தர் இப்படியாக சொல்லும்படி நாம் ஒவ்வொரு நாளும் உண்மையுள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டும். கர்த்தர் உண்மையும், நீதியும் உள்ள தேவன். அவர் இருதயத்தைப் பார்க்கிறவர்.

### உண்மையுள்ளவர்களை உயர்த்தும் கர்த்தர்

**மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான்** (எபிரெயர் 3:5). அதனால் கர்த்தர் அவனை இஸ்ரவேல் ஜனங்களுக்கு தலைவனாக ஏற்படுத்தினார். ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, கானானுக்கு வழிநடத்திச் செல்ல தெரிந்துகொண்டார். அவன் கர்த்தர் கூறியபடியெல்லாம் செய்தான். மோசேயின் கூட பிறந்தவர்களான ஆரோனும், மிரியாமும் மோசேக்கு எதிராக பேசினார்கள். கர்த்தர் ஜனங்களிடம் மோசேயைக் கொண்டு மட்டும் பேசவில்லை, எங்களைக் கொண்டும் பேசினார் என்றார்கள். கர்த்தர் ஆரோனையும் மிரியாமையும் அழைத்து, நான் உங்களோடு தரிசனம் சொப்பனம் மூலமாக பேசுகிறேன். மோசே உண்மையுள்ளவனாய் இருப்பதினால், நான் அவனோடுகூட முகமுகமாய் பேசுகிறேன். என் தாசனாகிய மோசேக்கு விரோதமாக ஏன் துணிந்து பேசுகிறீர்கள் என்று கேட்டார். கர்த்தருடைய கோபம் அவர்கள் மேல்



வந்தது. மிரியாம் குஷ்டரோகியானாள். கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்ட உண்மையான ஊழியர்களுக்கு எதிராக நாம் பேசக்கூடாது. அவர்களுக்கு எதிர்த்து நின்றால், தேவகோபம் வரும். அப்படி பேசாதபடி நம்மைக் காத்துக் கொள்வோம்.

மேலும் கர்த்தருக்கு ஊழியம் செய்பவர்கள், மோசேயைப்போல உண்மையாய் இருக்க வேண்டும். அப்பொழுது, கர்த்தர் மோசேயை மகிமையாய் பயன்படுத்தினதுபோல, உங்களையும் பயன்படுத்துவார். ஊழியம் செய்பவன், தன் சுயமகிமையைத் தேடாமல் தன்னை அனுப்பின இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறவனாக இருக்க வேண்டும். அவனே உண்மையான ஊழியக்காரன் (யோவான் 7:18).

### உண்மையுள்ளவர்களை பாதுகாக்கும் தேவன்

**அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறையும் காணப்படவில்லை** (தானியேல் 6:4). தரியுராஜா பாபிலோனை அரசாண்ட போது, தனது ராஜ்யம் முழுவதையும் ஆளுவதற்கு நூற்றிருபது தேசாதிபதிகளை தேர்ந்தெடுத்தான். இவர்களுக்கு மேலாக மூன்று பிரதானிகளை தேர்ந்தெடுத்தான். தானியேல் இந்த மூன்று பிரதானிகளில் ஒருவனாயிருந்தான். தானியேல் நற்குணங்களையும், திறமைகளையுடையவனாகவும் இருந்தான். தானியேலுக்குள் விஷேஷித்த ஆவி இருந்தமையால், ராஜா தானியேலை ராஜ்யம் முழுவதற்கும் அதிகாரியாக ஏற்படுத்த நினைத்தான். மற்ற பிரதானிகளும், தேசாதிபதிகளும் இதனை அறிந்ததும் மிகவும் பொறாமை கொண்டு, அவன் மேல் குற்றம்சாட்ட தகுந்த காரணங்களைத் தேடினர். ஆனால், அவர்களால் எந்த குறையையும் கண்டுபிடிக்க முடியவில்லை. தானியேல் நேர்மையானவனாகவும், நம்பக்கைக்குரியவனாகவும் இருந்தான். அந்த மனுஷர்கள் தானியேலை அவனுடைய தேவனைப்பற்றிய விஷயத்திலே குற்றம் காணவேண்டும் என்று தீர்மானித்தனர். எவராவது இன்னும் முப்பது நாட்களுக்கு ராஜாவாகிய உம்மைத்தவிர வேறெந்த தேவனையோ, மனிதரையோ நோக்கி எந்த ஒரு காரியத்திற்கும் ஜெபம் செய்தால், அவன் சிங்கக் கெபியிலே போடப்படுவான் என்ற ஒரு சட்டத்தை இயற்றி, அதை ராஜாவை கையெழுத்து போடும்படி செய்தனர். தானியேல் இதை அறிந்தும், எப்பொழுதும்போல, ஒவ்வாரு நாளும் முழுங்காலில் நின்று தேவனிடம் மூன்றுமுறை ஜெபம் செய்தான். ஜனங்கள் இதை ராஜாவுக்கு அறிவித்த போது, தானியேலை சிங்கக் கெபியிலே போடக் கட்டளையிட்

டான். தேவன் தம்முடைய தூதனை அனுப்பி சிங்கங்களின் வாயைக் கட்டி சிங்கங்கள் அவனைச் சேதப்படுத்தாதபடிக்கு பாதுகாத்தார். தானியேலை



குற்றஞ்சாட்டினவர்களை சிங்கக் கெபியிலே போட்டார்கள். **உண்மையானவனைக் கர்த்தர் தற்காத்து, இடும்பு செய்கிறவனுக்குப் பூரணமாய் பதிலளிப்பார்** (சங்கீதம் 31:23).

பிரியமானவர்களே, மற்றவர்கள் உங்கள்மேல் பொறாமைப்பட்டு வீணாய் பழிசுமத்தி தீமையான காரியங்களை உங்களுக்கு எதிராக செய்கிறார்களா? பயப்படாதேயுங்கள். கர்த்தர் உங்களுக்கு பாதுகாப்பாய் இருப்பார். தீய ஜனங்கள் உண்மையாய் இருப்பவர்களுக்கு எதிராக சூழ்ச்சி செய்து, மற்றவர்களை அவர்களுக்கு எதிராக தூண்டி விடுவார்கள். பயப்படாதேயுங்கள். கர்த்தரே அவர்களுக்கு நீதியைச் சரிக்கட்டுவார்.

நம் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் நாம் உண்மையாய் இருக்க வேண்டும். நாம் ஒரு சின்ன வேலையைச் செய்யும்போதும், அதை உண்மையாய் செய்ய வேண்டும். நாம் சிறிய வேலையைத்தானே செய்கிறோம் என்று அலட்சியமாய் செய்யக் கூடாது. **கொஞ்சத்தில் உண்மையாய் இருப்பவனை அநேகத்தின் மேல் அதிகாரியாக வைப்பேன்** (மத்தேயு 25:23). நாம் மனிதர்களுக்கு முன்பாக அல்ல கர்த்தருக்கு முன்பாக வேலை செய்கிறோம் என்ற எண்ணம் எப்பொழுதும் நமக்கு வேண்டும். அப்பொழுது நாம் நிச்சயமாய் ஆசீர்வதிக்கப்படுவோம். மேலும் பண விஷயத்தில் நாம் உண்மையாய் இருக்க வேண்டும். மற்றவர்களுக்குரியதை நாம் ஒருபோதும் எடுத்துக் கொள்ளக் கூடாது. நம்மிடம் வேலைபார்ப்பவர்களுக்கு உழைப்பிற்கேற்ற கூலியை உடனே நாம் கொடுத்துவிட வேண்டும்.

கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் உண்மையாய் இருக்க வேண்டும். ஒருபோதும் ஒருவர் மற்றவருக்கு துரோகம் பண்ணக் கூடாது. ஒருவரையொருவர் உண்மையாய் நேசித்தால் தவறு செய்ய மாட்டார்கள். எப்பொழுதும் கர்த்தர் தன்னை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற உணர்வுடன் இருக்கவேண்டும். யோசேப்பு கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்வது எப்படி? என்று பாவத்திற்கு விலக்கி தன்னை பாதுகாத்துக் கொண்டான். கர்த்தருக்கு உண்மையாய் இருந்தான். நாம் எப்படியாக இருக்கிறோம்? தாவீது தான் செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்பு கேட்கிறான். தேவனை நோக்கி இப்படியாக ஜெபிக்கிறான்: **இதோ உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்** (சங்கீதம் 51:6). உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். நாம் ஒவ்வொருவரும் உண்மையாய், பரிசுத்தமாய் இருக்க நம் தேவன் விரும்புகிறார்.

மற்றவர்களை உண்மையாய் நேசிக்க வேண்டும். ஏதோ உதட்டளவில் இனிமையாக பேசிவிட்டு



இருதயத்தில் உண்மையான அன்பில்லாமல் இருந்தால், நாமும் பரிசேயர்களைப்போல மாய்மாலக்காரர்களாய் இருக்கி றோம். இன்றைக்கும் அநேகருடைய அன்பு போலியாகத்தான் இருக்கிறது. கடமைக்காக பேசுவார்கள், எல்லாவற்றையும் செய்வார்கள். அவர்கள் பேசுவதை வைத்தே நாம் அவர்களின் அன்பு உண்மையானதா இல்லையா என்பதை அறிந்து கொள்ளலாம். இயேசு கிறிஸ்துவின் அன்பு உண்மையானது. மாய்மாலமற்றது. நம்மேல் வைத்த அன்பினால் நாம் செய்த பாவங்களுக்காக தம்மையே ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்தார். நம் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக அவர் சிலுவையில் இரத்தத்தை சிந்தினார். தியாகமுள்ள அன்பு. இயேசு கிறிஸ்துவைப்போல மற்றவர்களையும் நம்மைப்போல் உண்மையாய் நேசிப்போம்.

கர்த்தர் நமக்கு கொடுத்த நேரத்தில் உண்மையாய் இருக்க வேண்டும். நாம் உண்மையாய் கர்த்தரை நேசித்தோமென்றால், அவருக்குரிய நேரத்தை அவருக்குக் கொடுப்போம். வேதத்தை வாசிப்போம், தியானிப்போம், ஜெபிப்போம். காலத்தை வீணாக்கமாட்டோம். அநேகர் கர்த்தர் தங்களுக்கு கொடுத்த நாட்களை வீணாய் கழிக்கின்றனர். மற்றவர்களிடம் தேவையில்லாத காரியங்களை பேசி நேரத்தை கடத்துகின்றனர். சிலர் படம் பார்ப்பதிலும், கதைப் புத்தகங்களைப் படிப்பதிலும், நேரத்தை கடத்துகிறார்கள். கர்த்தரைப்பற்றி அறிகிற அறிவில் நாம் வளர நம் நேரத்தை செலவிட வேண்டும்.

கர்த்தருக்கு கொடுப்பதில் நாம் உண்மையாய் இருக்க வேண்டும். நம் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை கர்த்தருக்கென்று கொடுக்கும்போது, உண்மையான ஆசீர்வாதம் நமக்கு கடந்து வரும். கர்த்தருடைய ஊழியங்களுக்கு தாராளமாய் கொடுக்க வேண்டும். அப்பொழுது வானத்திலிருந்து மழை பெய்வது போன்று, இடங்கொள்ளாமல் போகுமட்டும், தேவைக்கும் அதிமாகவே ஆசீர்வாதங்கள் வரும் (மல்கியா 3:10). ஒரு சகோதரி இப்படியாக கூறினார்கள்: நாங்கள் முன்பெல்லாம் தசமபாகம் கொடுப்பதில்லை. ஆனால், இப்பொழுது நாங்கள் கொடுக்கிறோம். அதனால் கர்த்தர் எங்களை அதிகமாய் ஆசீர்வதித்திருக்கிறார் என்று அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டதை பகிர்ந்து கொண்டார்கள். நாமும் உண்மையாய் கர்த்தருக்கு கொடுப்போம். ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வோம்.

ஊழியர்களும், சபை ஊழியர்களும், கர்த்தர் தங்களுக்கு கொடுக்கும் காணிக்கை, தசமபாகங்களில் உண்மையாய் இருக்கவேண்டும். அவற்றில் அவர்கள் தசமபாகத்தை மற்ற ஊழியங்களுக்கு கொடுக்க வேண்டும். கஷ்டப்படும் ஏழை, எளிய ஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டும். தேவையோடு இருப்பவர்களுக்கு கொடுக்க வேண்டும். அப்பொழுது அவர்களது ஊழியத்தின் தேவைகளெல்லாம் சந்திக்கப்படும். தேவைக்கும் அதிகமாய் பெற்றுக் கொள்வார்கள். இன்றைக்கு அநேக ஊழியர்கள் மற்றவர்களிடமிருந்து வாங்குகிறவர்களாய் மட்டும் இருக்கிறார்கள். மற்ற ஊழியங்களுக்கு, ஏழைகளுக்கு கொடுப்பவர்களாய் மாறவேண்டும். ஊழியர்கள் என்றால் மற்றவர்கள் அவர்களுக்கு கொடுக்க வேண்டும், உதவி செய்யவேண்டும் என்ற தவறான எண்ணத்தோடு இருக்கிறார்கள். நாம் வாங்குகிறவர்களாய் மட்டுமல்ல, கொடுக்கிறவர்களாய் மாறவேண்டும். உங்களுக்கு வரும் கொஞ்சம் காணிக்கையில் உண்மையாய் தசமபாகம் கொடுக்கும்போது, உங்களுடைய பற்றாக்குறை மாறி தேவைகளெல்லாம் சந்திக்கப்படும். இடங்கொள்ளாமல் போகு

மளவிற்கு ஆசீர்வதிக்கப்படுவீர்கள். அநேகர் தசமபாகம், காணிக்கை கொடுக்காததால் கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்க முடியாதபடி அவர்களே அவர்களுடைய ஆசீர்வாதத்திற்கு தடையாக இருக்கிறார்கள். கஷ்டத்திலேயே இருக்கிறார்கள்.

**உன் பொருளாலும் உன் எல்லா விளைவின் முதற்பலனாலும், கர்த்தரைக் கனம் பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும்** (நீதிமொழிகள் *3:9,10*). ஆதலால் உண்மையாய் ஊழியம் செய்பவர்களுக்கு உதவி செய்யுங்கள். அவர்களுக்கு கொடுப்பதற்கு தயங்காதீர்கள். அநேகர் தங்களிடம் இருப்பதை மற்றவர்களுக்கு கொடுத்தால் தங்களுக்கு ஒன்றுமிருக்காது, குறைந்துபோகும் என்று நினைக்கிறார்கள். இயேசு கிறிஸ்து கூறுகிறார்: **கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்** (லூக்கா *6:38*). மற்றவர்கள்மீது அக்கரையுள்ளவர்களாக, அன்பு செலுத்துகிறவர்களாக, துன்பத்தில் இருப்பவர்களுக்கு உதவுபவர்களாக இருந்தால், நாம் இவற்றையெல்லாம் மற்றவர்களிடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்வோம். நாம் எதை விதைத்தோமோ அதையே அறுப்போம். இதைத்தான் இயேசு கிறிஸ்து குறிப்பிடுகிறார். நாம் தாராள மனப்பான்மையோடு மனதார கொடுக்கும்போது, மற்றவர்களும் நமக்கு தாராள மனப்பான்மையோடு மனதார கொடுப்பார்கள். மற்றவர்களிடம் அன்போடு, இரக்கத்தோடு, கனிவோடு நடக்கும்போது, மற்ற மனிதர்களும் நம்மிடம் அன்போடு இரக்கத்தோடு நடந்து கொள்வார்கள்.

**வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு. உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்கு தண்ணீர் பாய்ச்சப்படும்** (நீதிமொழிகள் *11:24,25*). நாம் கஷ்டப்படுகிற, தேவையிலிருக்கிறவர்களுக்கு தாராள மனதோடு கொடுக்கும்போது, மேலும் மேலும் பெற்றுக் கொள்வோம். மற்றவர்களுக்கு கொடுக்க மறுக்கிறவர்கள் ஏழையாகவே இருப்பார்கள். கஞ்சத்தனம் பண்ணி சேர்த்தாலும், தேவையோடேதான் இருப்பார்கள். தாராள மனப்பான்மையுடையவர்கள் செழிப்பாய் இருப்பார்கள். நாம் மற்றவர்களுக்கு கொடுக்கும் எண்ணத்தை உடையவர்களாக மாற வேண்டும். மனமுவந்து உற்சாகமாய் கொடுக்க வேண்டும். **கருணைக் கண்ணன் ஆசீர்வதிக்கப்படுவான்; அவன் தன் ஆகாரத்தில் தரித்திரனுக்குக் கொடுக்கிறான்** (நீதிமொழிகள் *22:10*). கர்த்தருடைய வார்த்தையின்படி, தாராளமாய் கொடுக்கும்போதுதான் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம். சிலர் கர்த்தருடைய வார்த்தையின்படி, தரித்திரருக்கு கொடுக்காமல், இருக்கிறவர்களுக்கே கொடுத்துக் கொண்டிருப்பார்கள். **ஏழைகளுக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்** (நீதிமொழிகள் *19:17*). ஏழைகளுக்கு கொடுப்பதை கர்த்தர் தனக்கு கொடுப்பதாகக் கூறுகிறார். **தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான்; தன் கண்களை ஏழைகளுக்கு விலக்குகிறவனுக்கோ அநேக சாபங்கள் வரும்** (நீதிமொழிகள் *28:27*). இந்த வேத வார்த்தைக்கு முழுமையாக கீழ்ப்படிந்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வோம்.



**வாரியிறைத்தான் ஏழைகளுக்கு கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்; அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும்** (சங்கீதம் *112:9*). நாம் ஏழைகளுக்கு கொடுக்கும்போதுதான், நமக்கு தேவையான, நம் உள்ளம் வாஞ்சிப்பதையெல்லாம் பெற்றுக் கொள்வோம். உண்மையான ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள முடியும். ஏழைகளுக்கு தேவையில் இருப்பவர்களுக்கு கொடுக்க மறுத்து, வசதியோடு இருப்பவர்களுக்கு கொடுத்துக் கொண்டிருந்தால் வாழ்க்கையில் துன்பங்களும், போராட்டங்களும், தொல்லைகளும் வரும். சமாதானம் இருக்காது. கர்த்தருடைய வார்த்தை ஏழைகளுக்கு கொடுங்கள் என்று இருக்கிறதேயொழிய செல்வந்தர்களுக்கு, வசதியோடு இருப்பவர்களுக்கு கொடுங்கள் என்று கூறவில்லை. கர்த்தருடைய வார்த்தைக்கு உண்மையாய் கீழப்படிவோம். அநேகர் வேத வார்த்தையை படிக்காததால் தங்கள் சுய இஷ்டப்படி நடக்கிறார்கள். வேதத்தை படித்து கர்த்தரைப் பற்றி அறிகிற அறிவில் வளர்வோம். கர்த்தருடைய வார்த்தையின்படி நடக்க உண்மையாய் இருப்போம். தேசத்திலே உண்மையும் இல்லை. இரக்கமும் இல்லை; தேவனைப் பற்றிய அறிவும் இல்லை (ஓசியா *4:1*).

யூதாவை அரசாண்ட ராஜாக்களில் யோசியா ராஜா, கர்த்தருக்கு உண்மையாய் இருந்தான். கர்த்தரை தன் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், தன் முழு பலத்தோடும் தேடினான். தான் கர்த்தரை தேடினதுமல்லாமல், தன் தேசத்து ஜனங்களும் கர்த்தரை தேடும்படி செய்தான். யோசியா ராஜா உண்மையாக, பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டான். எப்படி வாழ வேண்டும் என்று அவன் முன்மாதிரியாக இருந்து சரியாக வாழ்ந்து காண்பித்தான். அவன் ஏழைகளுக்கும், தேவையிலிருந்தவர்களுக்கும் உதவி செய்தான். ஆகையால் அவனுக்கு எல்லாக் காரியங்களும் எளிதாக நடந்தன. ஆனால், அவனது மகன் யோயாக்கீம் உண்மையில்லாதவனாய், பொறுப்புணர்வற்றவனாய் நடந்து கொண்டான். தன்னிடம் வேலை செய்த ஜனங்களுக்கு கூலி கொடுக்காமல் ஏமாற்றினான். அவன் தனக்கு விஸ்தாரமான வீட்டையும், காற்று வீசும் விஸ்தாரமான மேலறைகளையும் கேதுருபலகைகளை வைத்து கட்டினான். உண்மையில்லாதவனாய் நடந்து கொண்டதால் தேவகோபம் அவன்மேல் வந்தது. தன் தகப்பனுக்கு நேர் எதிராக இருந்தான். **அநீதியினால் தன் வீட்டையும், அநியாயத்தினாலே தன் மேலறைகளையும் கட்டி, தன் அயலான் செய்யும் வேலைக்குக் கூலி கொடாமல், அவனைச் சும்மா வேலை கொள்ளுகிறவனுக்கு ஐயோ!** (எரேமியா *22:14*). யோயாக்கீம் தன் தகப்பனுடைய தேவனைப் பின்பற்றவில்லை. நேபுகாத்நேச்சாரால் கைதியாக கொண்டு செல்லப்படும்போது மரணமடைந்தான்.

**அவனுடைய தகப்பனாகிய யோசியா சிறுமையும், எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான்; அப்பொழுது சுகமாய் வாழ்ந்தான்; அப்படிச் செய்வதல்லவோ என்னை அறிகிற அறிவு என்று கர்த்தர் சொல்லுகிறார்** (எரேமியா *22:16*). ஒருவன் கர்த்தரைப் பற்றி சரியாக அறிந்து கொண்டால் நியாயமாக இருந்து,ஏழை எளியவர் களுக்கும் தேவையில் இருப்பவர்களுக் கும் உதவி செய்வான். கர்த்தர் அவனவனுக்கு அவனவன் நீதிக்கும், உண்மைக்கும் தக்கதாகப் பலன் அளிப்பாராக. ஆமென்!

# தேவ சித்தம் 1

**பால்ராஜ் கென்னடி**



**தே**வனே தம்முடைய சித்தப்படி நம்மை நடத்திச் செல்வார். ஏன் நாம் அதை ஆராய்ந்து, அறிந்து அதின்படி நடக்க வேண்டும்? எப்படி சூரியன், பூமி எல்லாம் இயங்குகிறதோ அதேபோல் நம்முடைய வாழ்க்கையும் கர்த்தரால் இயக்கப்பட்டுவிடுமே, அதைப்பற்றி நாம் ஏன் அறிந்து கொள்ள வேண்டும்? நமக்கு எப்போது? எது தேவை? எதற்கு தேவை? இவையெல்லாவற்றையும் நம் தேவன் அறிவார். அதினால் அவரே நம்மையும், நம் வாழ்க்கையையும் பார்த்துக் கொள்வார். ஒரு சிறு குழந்தை தன்னை சுமக்கும் தன்னுடைய தகப்பனின் மார்பில் சாய்ந்து கொண்டு, எதைப்பற்றியும் கவலைப்படாமல் தன் தகப்பனை முழுமையாக நம்பி இருப்பதைப் போல, நாமும், நம்முடைய பரம தகப்பனிடம் நம்முடைய வாழ்க்கையை முழுமையாக ஒப்படைத்துவிட்டு வெறுமனே, சும்மா இருக்கலாமே. ஏன் நாம், தேவனுடைய சித்தத்தை அறிய முனைய வேண்டும்?

தேவனை அறியாதவன், தேவனுடைய சித்தத்தையும் அறியமாட்டான். அவன், சுயமாக தன்னுடைய சித்தத்தின்படி நடப்பான். மனசாட்சியின்படி, பாவத்திற்கு விலகியிருந்து, தூய்மையான வாழ்க்கையைக்கூட வாழலாம். இன்னும் சிலர், நடப்பதெல்லாம் தானாக நடக்கவில்லை, தெய்வம் என்று ஒன்று இருக்கிறது, அதுதான் எல்லாவற்றையும் நடப்பிக்கிறது, என்னுடைய வாழ்க்கையையும் அந்த தெய்வம்தான் நடத்துகிறது என்ற தெய்வ நம்பிக்கையுடன்கூட இருக்கலாம்.

இவர்களுடைய வாழ்க்கையை உற்று கவனித்துப் பார்த்தால் இவர்களுடைய அன்பு, உள்ளார்ந்த மனுஷனிடத்திலிருந்து வெளிப்படுவதாக இருக்காது. புறம்பான மனுஷனிடத்திலிருந்து வரும் அன்பாக, ஒரு செயலாக இருக்கும்.

தேவன், தங்கள்மேல் வைத்திருக்கிற அன்பை உணராதவர்களாக இருப்பார்கள். தேவன்மீதும் மற்ற மனிதர்கள்மீதும் உண்மையான அன்பு இவர்களுக்கு இருக்காது.

மற்ற மனிதர்கள் தங்கள்மீது செலுத்தும் அன்பையும் உணரமாட்டார்கள்.

எந்த மனுஷன், தேவன் தன்மீது வைத்துள்ள அன்பை சரியாக உணர்ந்து கொள்கிறானோ, அவனே தேவனுடைய சித்தத்தை நாடுவான்.

தேவ சித்தத்தை அறிந்து கொள்ள சிலர் ஆவலாக இருப்பார்கள். அடுத்து என்னுடைய வாழ்க்கையில் என்ன நடக்கப்போகிறது? என்பதை அறிந்து கொள்ளும் ஆவல் மாத்திரமே இவர்களுக்கு இருக்கும். இது சுய அன்பே.

சிலர், சம்பிரதாயமாக, சடங்காச்சாரமாக, (ஜாதகம், ஜோசியம் பார்ப்பது போல) தேவனுடைய சித்தத்தை கேட்பார்கள். பின்னால் வாழ்க்கையில் பிரச்சனை வரக்கூடாது என்பதற்காக கேட்பார்கள். இதுவும் சுய அன்பே.

பலர், போராட்டம், பிரச்சனை, தடைகள், நெருக்கடி இவற்றிலிருந்து எனக்கு ஒரு விடிவு காலம் வராதா என்று தேவ சித்தம் கேட்பார்கள். இதுவும் சுய அன்பே.

உண்மையான அன்பு என்பது, இயேசுவைப்போல தன்னையே ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்கும் அன்பே. இப்படிப்பட்ட அன்பு எங்கு இல்லையோ அங்கு தேவ சித்தம் நிறைவேறவில்லை என்று அர்த்தம்.

யோபு, எல்லாவற்றையும் இழந்த பிறகும், தேவன்மேல் அவன் வைத்த



அன்பை விடவில்லை. அப்படித்தான் சாத்தானை ஜெயித்தான்.

மோசே, யோசேப்பு, தாவீது, தானியேல், பவுல் இவர்களெல்லாருமே தேவ சித்தத்தை தங்களுடைய வாழ்க்கையில் பிரதானமாக வைத்து, வாழ்ந்தார்கள். தேவனை இவர்கள் நேசித்தார்கள். தேவன், இவர்கள் மீது வைத்திருந்த அன்பை முழுமையாக உணர்ந்தவர்களாக இருந்தார்கள்.

நாமும், தேவன் நம்மீது வைத்துள்ள அன்பை நினைத்துப் பார்த்தோமானால், நம்மை நாமே நேசிக்கும் சுய அன்பை விட்டுவிட்டு, தேவன், நாம் என்ன செய்ய சித்தப்படுகிறார் என்பதைத் தெரிந்துகொண்டு, அதின்படி நடப்போம்.

நம்முடைய சித்தத்தை செய்யாமல், தேவனுடைய சித்தத்தை செய்வதே பரிபூரணமான முழுமையான ஆவிக்குரிய வளர்ச்சியும், முதிர்ச்சியுமாகும். மோசே, தாவீது, பவுல் இவர்களெல்லாரும் இதில் உறுதியாய் இருந்தார்கள். பாடுகள், உபத்திரவங்கள், போராட்டம், நெருக்கடி, அவமானம், நிந்தைகள் இருந்தாலும், தேவனுடைய சித்தத்தையே செய்வேன் என்றிருப்பதே பூரணமான ஆவிக்குரிய நிலையாகும்.

ஒருவனுடைய ஆவிக்குரிய வளர்ச்சி என்பது, அவனது சுயம் போய், இயேசு, அவனுக்குள் எவ்வளவு இருக்கிறார் என்பதே. நம்முடைய ஆவியில் பரிசுத்த ஆவியானவர் எந்த அளவு இடைபட்டு, வாசம் செய்கிறாரோ அதுவே ஆவிக்குரிய வளர்ச்சி. பரிசுத்த ஆவியினால் நாம் எவ்வளவு நிரம்புகிறோமோ அதுவே ஆவிக்குரிய வளர்ச்சி. நம்முடைய சுயம் போக வேண்டும். சுய எண்ணங்கள், சுய நலம், சுய யோசனைகள், சுய திட்டங்கள், சுய

## தேவன் தன்மீது வைத்துள்ள அன்பை சரியாக உணர்ந்து கொள்கிறவனே, தேவனுடைய சித்தத்தை நாடுவான்

தீர்மானங்கள் நம்மைவிட்டு அகல வேண்டும். வேதத்தைத் தியானிக்க, தியானிக்க, கர்த்தருடைய யோசனைகள், கர்த்தருடைய திட்டங்கள் நமக்குள் வரும். கிறிஸ்துவின் சிந்தை நமக்குள் வரும் (பிலிப்பியர் 2:5). அவருடைய சித்தத்தை செய்கிறவர்களாக நாம் மாறிப் போவோம்.

வேதத்தின் ஆழங்களை எவ்வளவு தெரிந்து கொள்கிறோமோ, அவ்வளவு கர்த்தரைப் பற்றித் தெரிந்து கொள்ளுகிறோம். அவருக்கு பிரியமானது, பிரியமில்லாதது, அவரது தாகம், தரிசனம், நோக்கம், எதிர்பார்ப்பு, அவரது குணாதிசயங்கள், அவரது உணர்வுகள் இவைகளையெல்லாம் அறிந்து கொள்வதே ஆவியில் வளர்வதாகும். வேதத்தின் ஆழங் களை, மறைபொருள்களை, பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துவார் (1 யோவான் 2:27). தாகத்தோடும், உபவாசத்தோடும் (வெளிப்பாட்டிற் காக) வேதத்தைப் படிக்க வேண்டும்.

கர்த்தர், நம்மைக்குறித்து மேலான நினைவுகளையும், வழிகளையும் வைத்திருக்கிறார் (ஏசாயா 55:8,9). அதை அறிந்து கொள்வதே ஆவிக்குரிய முதிர்ச்சியாகும். அதை தெரிந்து கொள்ள நாம் செய்யவேண்டியதெல்லாம், தினமும் தொடர்ந்து வேதத்தைத் தியானிக்க வேண்டும். கர்த்தர், வேத வசனங்கள் மூலம் நமக்கு அவற்றை காண்பிப்பார்.

யாருக்காக ஜெபித்தாலும், அவர்களுக்கான அவர்களது சூழ்நிலைக்கானக் காரியங்களை வெளிப்படுத்தும் வேதத்தின் வார்த்தையை எப்போதும் நாம் கர்த்தரிடத்திலிருந்து கேட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். வேதத்தின் வார்த்தை இல்லாமல் கர்த்தர் பேசமாட்டார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்போது தரிசனம் கொடுத்தாலும், வேதத்தின் வார்த்தையை வைத்துத்தான் பேசுவார்.

கர்த்தரை ஒருவன் உண்மையாக நேசிப்பானென்றால், அவருடைய வேதத்தில் பிரியமாய் இருந்து, நேரம் கிடைக்கும்போதெல்லாம், இரவிலும், பகலிலும் அதை தியானிப்பான். கர்த்தருடைய குணாதிசயங்களை அறிந்து கொள்வதில் தீவிரமாக இருப்பான். அவருக்குப் பிரியமானது, பிரியமில்லாததை அறிந்துகொண்டு, அதின்படி நடப்பான். தன்னுடைய சித்தத்தை செய்யாமல் (சுய இஷ்டப்படி நடக்காமல்), தேவனுடைய சித்தப்படி நடப்பவனாக இருப்பான். மரணமே நேரிட்டாலும், தேவனுடைய சித்தத்தையே செய்வான்.

தேவனுடைய விருப்பத்திற்கும், தேவனுடைய சித்தத்திற்கும் (God's Wish and Gos's will ) வேறுபாடு உண்டு. தேவனுடைய அழைப்பைப் பெற்று ஒருவன் ஊழியம் செய்வது, தேவனுடைய சித்தமாகும். ஒருவன், தானாக விரும்பி, தேவனுடைய அழைப்பு இல்லாமல் ஊழியம் செய்வது, தேவனுக்கு விருப்பமாக, பிரியமாக இருக்கலாம். ஆனால், இது தேவனுடைய சித்தமல்ல. ஏனென்றால், ஒவ்வொரு மனுஷனையும் உருவாக்குவதற்கு முன்னரே அந்த மனுஷனைக் குறித்தக் காரியங்களை கர்த்தர் எழுதி வைத்து விடுகிறார் (சங்கீதம் 139:16). இதுதான் தீர்க்கதரிசன புஸ்தகம். அதில் எழுதியிருப்பதை நிறைவேற்றுவதே தேவனுடைய சித்தமாகும். ஊழிய அழைப்பு இருந்தால், அந்த தீர்க்கதரிசன புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கும். மேலும் அதற்கான அபிஷேகத்தைத் கர்த்தர் தருவார். ஊழிய அழைப்பு இல்லையென்றால், அதற்கான அபிஷேகம் இருக்காது. அவன் எந்த வேலையைச் செய்ய வேண்டுமோ அதற்கான அபிஷேகமே இருக்கும். அந்த அபிஷேகத்தைக் கொண்டு ஊழியத்தைச் செய்ய முடியாது. அந்த மனிதனுக்கு கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்று விருப்பமிருந்தால், அப்படிப்பட்டதொரு ஊழியத்தைச் செய்ய கர்த்தர் அனுமதிப்பார். பரிசுத்த ஆவியின் வரங்கள் செயல்படாது. ஒரு ஊழியக்காரனுடைய இருதயம் வராது. ஊழியம் என்பது கர்த்தர் செய்வது. அதை மனுஷனாக செய்ய முடியாது.

- தொடரும்

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | ரூ. | 200/- |
| **வெளிநாட்டு வருட சந்தா** | ரூ. | 2000/- |

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

ICICI **வங்கி கணக்கு எண் :** 0350 0150 7744

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜூ பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா


